கேற்றவாறு அந்த மருந்துகளை மானிய விலையில்கூடக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை

அவையை ஒத்திவைக்குமுன் அவையின் கருத்து அறிதல்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அவை நடவடிக்கைகள் குறித்துச் சொல்வதற்கு—

It is high time இது அவசியம் என்று நான் நினைக்கிறேன். இது குறித்து துணைத் தலைவரவர்களோடு நீங்கள் கொஞ்சம் டிஸ்கஸ் செய்ய வேண்டியது அவசியம்.

நேற்று மாலை வறட்சி, வெள்ளம் சம்பந்தமான விவாதம் நடந்து கொண்டிருந்தபொழுது மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் கூறிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பதிலைக் கூறி முடிக்கவில்லை. அவர் பதில் கூறிக்கொண்டிருந்தபோது, திரு. கருப்பையா அவர்கள் இன்டர்வீன் செய்ய எழுந்தபொழுது அமைச்சரவர்கள் உட்கார்ந்து விட்டார்கள். ஆனால் என்ன ஆச்சரியம் என்றால் டக்கென்று டெப்டி ஸ்பீக்கர் அவர்கள், அவை முடிந்து விட்டது என்று சொல்லி ஒரேடியாகப் போய் விட்டார்கள். I am telling this, in the interest of the House. வெளியிலே இருப்பவர்கள், இங்கே எப்படி ஹவுஸை நடத்து கிறார்கள் என்பதுபற்றித் தப்பான எண்ணத்திற்கு வரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அமைச்சரவர்கள் பேச்சை முடிக்கவில்லை. இவர் இன்டர்வீன் செய்தார். உடனே அமைச் சரவர்கள் உட்கார்ந்துவிட்டார்கள். அதற்குள் துணைத் தலைவ ரவர்கள் எழுந்து அவையை ஒத்திவைத்துவிட்டு கிடுகிடு என்று எழுந்து போய்விட்டார். நாங்கள் அப்படியே Stun ஆகி நின்று விட்டோம். உங்களுக்கும் தெரியும் நாடாளுமன்ற நடைமுறை கள் பற்றி.

The Speaker or the Deputy Speaker are not above the House. They are part of that House. Their power is to regulate all the proceedings of the House, that too under the rules. There is no subordinate-super subordinate relationship or master-servant relationship.

1984 பிப்ரவரி 23] [திரு. ரா. உமாநாத்]

ஆகவே, இனிமேலும் எங்களால் டாலரேட் பண்ண முடிய வில்லை. அவர்களிடத்திலே ரொம்பவும் மரியாதை கொடுக்கின்ற குணம் இருக்கின்றது. சில சமயங்களில் கடுமையாகப் பேசுவார்கள். அவ்வளவுதான். அதை நான் புரிந்துகொண்டேன். வேண்டுமென்று அவர் அவ்வாறு பேசுவதில்லை என்றும் அவருடைய சுபாவமே, அதாவது இயற்கையான சுபாவமே அதுதான் என்றும் புரிந்து கொண்டேன். ஆனால் இந்த பர்ட்டிகுலர் கான்டெக்ஸ்டை பொறுத்த வரையில், எங்களால் சகிக்க முடிய வில்லை. டாலரேட் பண்ண முடியவில்லை. நான் கன்ஃப்ரான்டேஷனைத் தவிர்க்க விரும்புகிறேன். எனவே இம்மாதிரி விஷயங்களில் டிஸ்கஸ் பண்ணுவது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய கவனத்திற்கு வந்தது. அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிட்டார்கள் என்பதாகத்தான் நான் கேள்விப்பட்டேன். (குறுக்கீடுகள்).

திரு. பி. எச். பாண்டியன்: தலைவர் அவர்களே எல்லோரும் பேசி முடித்து விட்டார்கள் என்று அறிந்ததற்குப் பிறகுதான் அவையினை நான் முடித்தேன்.

திரு. எல். இளையபெருமாள்: அமைச்சர் அவர்கள் நேற்று பேசி முடிக்கவில்லை.

திரு. ரா. உமாநாத்: அமைச்சரவர்கள் நேற்று பேசி முடிக்க வில்லை. (கூச்சல் குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று அவை முடிந்ததற்குப் பிறகு மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய அறை வழியாகத்தான் போனார்கள். எனவே, அப்போது அவர் பேசி முடிக்காதது போல் தோன்றவில்லை. இருந்தாலும் நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களிடத்திலே ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள், குழப்பம்) இப்படிப்பட்ட ஏதாவது பிரச்சினை என்றால், அதனை என்னுடைய அறையிலே வந்து சொல்லி இருக்கவேண்டுமே தவிர, திடீரென்று எழுந்து அவையிலே சொல்லக் கூடாது.

திரு. எல். இளையபெருமாள்: இது முக்கியமான பிரச்சினை. இதுபற்றி தலைவர் அவர்கள் அவையிலே சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுபற்றி கலந்துபேசி நல்ல முடிவுகளை எடுக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக எடுக்கின்ற மற்ற பிரச்சினைகள் என்றால் அதற்குரிய முடிவு தெரியும். அதாவது ஆம், இல்லை என்ற வகையிலே முடிவு தெரியும்,

ஆனால் நேற்று விவாதம் நடந்தது வெள்ளை அறிக்கையின் மீது. எனவே, அதிலே அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய பேச்சை முடித்துவிட்டார்கள்.

திரு. எல். இளையபெருமாள் : இல்லை. அமைச்சர் பேசி முடிக்கவில்லை. (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவை முடிந்தபோது நானும் அவையிலே இல்லை. ஆனால் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டேன். நீங்கள் பேசி முடித்துவிட்டீர்களா என்று...... (குறுக்கீடுகள்)...... அதாவது ஒரு பிரச்சினையிலே அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு ஒரு உறுப்பினர் ஏதேனும் ஐயம் கேட்கின்றபோது அதையும் அனுமதித்து, அவ்வாறு அதை அனுமதித்த பிறகு அமைச்சர் அவர்களும் அதற்குப் பதில் சொல்வது என்பதுதான் நடைமுறை. அந்த முறை காப்பாற்றப்பட வேண்டும் என்ற அளவில் ஒத்துக் கொள்கிறோம். எனவே, இனி எதிர்காலத்திலே இப்படிப்பட்ட சூழ்நிலை அதாவது மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் எழுப்பியது போன்ற சூழ்நிலைகள் ஏற்படாமல் இருக்கின்ற வகையிலே, இருசாராரும் ஒப்புக் கொள்கின்ற நிலைமையில் ஏற்பாடுகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் எடுத்துக் கொள்வார்கள் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தகவல் கோரல்.

அவை நிகழ்ச்சி தொலைகாட்சியில் தவறாக ஒலிபரப்பப்பெற்றது.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அன்றாடம் இரவு 9.00 மணிக்குத் தொலைக்காட்சியில் செய்தி அறிவிக்கப்படுவதை நாம் அறிவோம். அப்படி வாசிக்கப்படும் போது நேற்று முன்தினம் ஒரு தவறு நடைபெற்றது ; நேற்றும் ஒரு தவறு நடைபெற்றது. சபையினுடைய நிகழ்ச்சியைத் தவறுதலாக அறிவித்துள்ளார்கள்.

(முற்பகல் 10·30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் என்ன தவறு என்று எழுதிக் கொடுப்பார்களானால் அதைப் பரிசீலித்துப் பார்க்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : முதலமைச்சர் சொன்னதைத் தவறாக அறிவித்திருக்கிறார்கள். மாநகராட்சியில் ரூபாய் 1,000 கோடிக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு செய்யப்படவிருக்கின்றது என்று அறிவித்தார்கள். முதலமைச்சர் அவ்வாறு சொல்லவில்லை எங்கே போவது ரூபாய் 1,000 கோடிக்கு என்றுதான் சொன்னார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் சொன்னேன். எழுதிக் கொடுங்கள், பரிசீலிக்கிறேன் என்று.